REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ் ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 203

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்.. அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்	
உள்நாடு (இலங்கை உட்பட)	
ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு:	
ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

சென்னை : தை 24உ சனி (6—2—54) ★ ★ ★ வெளியூர் : தை 25உ ஞாயிறு (7—2—54)

ஆந்திர கல்வித் திட்ட பரிசீலனை குழு

—(:)—

மொழியும் — வாழ்க்கை வழியும் அற்றவரே குழு உறுப்பினர்கள்

—(:)—

கல்வி நிபுணர்களோடு சட்ட சபை பிரதிநிதிகளும் பங்கு பெற்றுள்ளனர்

ஆச்சாரியாருக்கு ஆந்திர கேசரியின் மறைமுகத் தாக்குதல்

கர்நூல், பிப். 5—

ஆந்திர சர்க்கார், 12 உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்றை, புதிய கல்வித் திட்டத்தை ஆராய்வதற்கு நியமித்துள்ளது.

இந்த முடிவை வெளியிட்ட ஆந்திர சர்க்காரின் கல்வி மந்திரி எஸ். பி. பி. பட்டாபிராம ராவ ஒரு பேட்டியின் போது, இந்த நிபுணர் குழு, புதிய கல்வித் திட்டம் புகுத்தப்பட்ட பின்பும், புகுத்தப்படுவதற்கு முன்பு மிருந்த நிலைகளை ஆராய்ந்தறியும் என்று குறிப்பிட்டார். ஆந்திரக் குழந்தைகளுக்குப் பொருத்தமானதும், பயனுள்ளதும், இலாபகரமானதுமான ஒரு ஆரம்பக் கல்வித் திட்டத்தை ஆராய்ந்து யோசனை கூறும் இக்குழு என்றும் அவர் தெரிவித்தார்.

ஏழு கல்வி நிபுணர்களையும், ஐந்து சட்டசபை உறுப்பினர்களையும் கொண்ட இக்குழுவி லிருப்போரின் விபரம் பின்வருமாறு:—

தோழர் நரசிம்மையா (மைசூர்) தலைவர் (ஆந்திர உதவி கல்வி இலாக்கா டைரக்டர்); ரங்காராவ்; டி. சுப்ரமணியம் (ஏலூரு கல்லூரி பிரின்சிபால், ஆந்திர மாநில ஆசிரியர் சங்கத் தலைவர்; வி. வி. சுப்பாராவ் (கல்வி நிபுணர் சென்னை). பாலகாராவ் (ராஜமகேந்திரம் பயிற்சிக் கல்லூரி பிரின்சிபால்) ஜனதாப் (காக்கிநாடா ரக்ஷசேவாசய பள்ளி); ஸ்ரீகண்டன்; கிருஷ்ணாராவ்; கிருஷ்ணமூர்த்தி ராவ் எம்.எல்.ஏ., வாவிலால கோபால கிருஷ்ணய்யா எம்.எல்.ஏ., ரோக்கம் லக்ஷ்மிநரசிம்மம் எம்.எல்.ஏ., ராமபத்ராராஜூ எம்.எல்.ஏ., கே. ராஜகோபால ராவ் எம்.எல்.ஏ.,— ஆகியோராவர்.

ஒரு மாவட்டக் கல்வி அதிகாரி இக்குழுவின் செயலாளராக நியமிக்கப்படுவார். குழு, கர்நூலிலிருந்து வேலை செய்யும். மார்ச் மாத இறுதிக்குள் தனது அறிக்கையை சர்க்காரிடம் சமர்ப்பிக்கும்.

பாக் - கப்பல்கள் நகர்கிறது!

கராச்சி, பிப். 6—

பாகிஸ்தான் கப்பல்கள், சீக்கிரமே மகாசமுத்திரங்களில் புறப்பட்டுச் செல்லுமெனத் தெரிகிறது.

பாகிஸ்தான் கைத்தொழில் அபிவிருத்தி கார்ப்பரேஷன் 5-கோடி மூலதனத்தைக் கொண்டு கப்பல் வர்த்தக உதவி கார்ப்பரேஷன் ஒன்றை ஏற்படுத்தவிருக்கிறது.

புதுக் கப்பல்களை ஜெர்மனியிடமிருந்து வாங்குவதற்காகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கைது செய்யப்பட்ட தி.மு.க. தோழர்கள் விடுதலை

★

கொல்லங்கோடு பிப் 5—

மலபார் மாவட்டத்திலுள்ள கொல்லங்கோடு என்ற ஊர் வழியாக திருவாங்கூர்—கொச்சிக்கு டண்டித நேரு சென்றதை முன்னிட்டு கைது செய்யப்பட்ட கொல்லங்கோடு தோழர்கள் நல்வரும் இன்று மாலை 7-30 மணிக்கு விடுதலை செய்யப்பட்டனர்.

ஆசிரியருக்குள்ள பளுவைக் கூட்ட சர்க்கார் கட்டளை!

—o—

பாருலேகர் யோசனைப்படிதான் இந்த அக்கிரமமாம்!

சென்னை, பிப். 6—

எலிமென்டரி பள்ளிக்கூடங்களில் மாணவர், உபாத்தியாயர் விகிதாச்சாரம் சம்பந்தமாக பாருலேகர் கமிட்டியின் சிபாரிசுகள் ஒப்புக்கொள்ளப்பட்டதின் விளைவாக இருக்கலாம். அதையொட்டி கல்வி இலாகா டைரக்டர் சில உத்தரவுகளை பிறப்பித்திருக்கிறார். அது வருமாறு:—

ஒற்றை ஸ்தாபனம் நடத்தும் பள்ளியில் பட்டியின்படி 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று அமுலிலிருப்பதை இரு தடவைகளுக்கும் சேர்த்து 60 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று மாற்ற வேண்டும்.

அதேபோல், எயிடெட் பள்ளிகளில் 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் — இதை இரு தடவைகளும் சேர்த்து 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று மாற்றவேண்டும்.

இந்த முறைகள் ஜூன் மாதத்தில் கையாளப்படும்.

1955, 56-ம் ஆண்டுகளில் முறையே 40, 50 மாணவர்கள் என உயர்த்தப்படும்.

இந்தப் புதுமுறையால் பாதிக்கப்படும் ஆசிரியர்கள் புதுப் பள்ளிக்கூடங்களிலும் கூடுதலாக நியமிக்கப்படுவர்.

பாருலேகர் கமிட்டியின் சிபாரிசுப்படி 10 முதல் 12 வயது வரையுள்ள சிறுவர் சிறுமியர்களுக்குப்பாடம் கற்றுக்கொடுக்க கூடுதலான ஆசிரியர்களைப் பயன்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இந்தியாவிற்கு முதல் மலேயா ஏஜெண்ட்

கோலாலம்பூர், பிப். 2—

இந்தியாவில் முதல் தடவையாக மலேயா சர்க்கார் ஏஜெண்ட் ஒருவர் நியமிக்கப்படவிருக்கிறார். இந்தியா, பாகிஸ்தான் ஆசிய நாடுகளிலும் ஏஜெண்டுகளை நியமிக்க மலேயா சர்க்கார் தீர்மானித்துள்ளது.

கல்லக்குடி அறப்போர் வழக்கு

—(:)—

அப்பீல் தாக்கல் செய்யப்பட்டது

24-ந் தேதியன்று விசாரணை ஆரம்பமாகும்

திருச்சி, பிப். 5—

தி. மு. கழகத்தினர் நடத்திய கல்லக்குடி அறப் போராட்டத்தில் கண்ணதாசன். அம்பில்-தர்மலிங்கம் முதலிய 22 தோழர்களுக்கு திருச்சி சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் சிறை தண்டனை விதித்ததை எதிர்த்து திருச்சி மாவட்ட நீதிபதி திரு பி. டி ராமன் நாயர் முன்னிலையில் நேற்று அப்பீல் செய்யப்பட்டது.

தோழர்கள் சார்பாக அப்பீல் மனுவை கமிலை ஆனந்தர் தாக்கல் செய்தார். அப்பீல் விசாரணை இம்மாதம் 24-ந் தேதி யன்று நடைபெறும்.

சிறை புகுந்துள்ளவர்களில் தோழர்கள் தர்மலிங்கம், சதாசிவன் ஆகிய இருவருக்கும் உடல்நிலை பாதிக்கப்படவே அவர்கள் இன்று மத்திய சிறையிலிருந்து திருச்சிக்குக் கொண்டு வரப்பட்டனர்.

"கடலை எண்ணையை பதுக்காதீர்!"

வர்த்தக மந்திரி எச்சரிக்கை

சென்னை, பிப். 6—

சென்னை வியாபாரிகள் கடலை எண்ணையை முடக்கி, விலையை உயர்த்த முயற்சிப்பது குறித்து யூனியன் வர்த்தகமந்திரி நேற்று கடுமையாக எச்சரித்தார்.

விலை டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய்க்குக் கீழ்வந்தாலன்றி ஏற்றுமதியை அனுமதிக்கப் போவதில்லை என்று கண்டிப்பாகக் கூறினார்.

'கடலை எண்ணையை முடக்கி, விலைகளை உயர்த்தினால் சர்க்கார் ஏற்றுமதியை அனுமதிக்கும்; எல்லோரும் லாபமடிக்கலாம்,' என்று சென்னையில் ஒரு தப்பபிப்பிராயம் இருந்து வருகிறதைக் குறிப்பிட்டு, 'இந்த வித்தையெல்லாம் பலிக்காது,' என்றார்.

கோலார் தங்கச் சுரங்கம்

—o—

தொழிற்சங்கங்களிடையே தாக்குதல்

ராபர்ட்சன்பேட்டை பிப். 4—

கோலார் தங்கச் சுரங்கத் தொழிலாளர் சங்கத்தைச் சார்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிற சுமார் 100 பேர்கள், தாழ்த்தப்பட்டோர் சங்கத்தைச் சார்ந்த நான்கு பேர்களின் வீட்டிலும், ஒரு மாவுமில்லிலும் படை எடுத்துத் தாக்கி சிலருக்கு காயமுண்டாக்கினர். சம்பவத்திற்குக் காரணம் சாம்பியன் தங்கச் சுரங்கத்தின் இரு தொழிற் சங்கங்களிடையே ஏற்பட்ட தவறான கருத்து வேறுபாடுகள் தான் என்று சொல்லப்படுகிறது. போலீசார் நிலைமையை அமைதிப்படுத்தினர். பிறகு மாலையில் கம்யூனிஸ்டு தொழிற் சங்கத்தினர் நடத்திய ஊர்வலம் ஒன்றை போலீசார் கலைத்துவிட்டனர்.

சென்னைப் பகுதியில் மீன்வளம்

சென்னை, பிப் 6—

சென்னை மாநிலத்தில் நாலு லட்சம் ஏக்கர்களுக்கு மேல், ஏரி, குளம், குட்டைகள் உள்ளன. இவைகளில் 15,000 ஏக்கர் தண்ணீரில் ஏராளமான மீன்கள் உள்ளன. மீன்கள் இல்லாத நிலப் பகுதிகளில், மீன்களைக் குடியேற்றச்செய்வதற்கான முயற்சிகளை மாநில சர்க்கார் மேற்கொள்ளவிருக்கிறது.

மாலடோவின் திட்டத்தில் மண்ணைசைதென்படுகிறதாம்

சோவியத் கருத்திற்கு மேற்கத்தியர் எதிர்ப்பு

பெர்லின், பிப், 6—

ஒரு அகில ஜெர்மன் சர்க்காரை ஏற்படுத்த ரஷ்யா சமர்ப்பித்த புதுத் திட்டத்தை மேற்கு நாடுகள் நிராகரித்தன. இந்தத் திட்டத்தின் மூலம் சோவியத் பகுதி ரைன் வரையில் வந்து விடும் என்றும், மேற்கு ஜர்மனி மீது ஆதிக்கம் கொள்வதே இதன் நோக்கம் என்றும் அவர்கள் கூறினர்.

"இப்போதுள்ள கிழக்கு மேற்கு சர்க்கார்களை ஒரே சர்க்காராக ஏற்படுத்தி அகில ஜேர்மனி தேர்தல்களுக்கு ஏற்பாடு செய்யலாம்," என்பது மாலடோவின் புதிய திட்டம்.

இந்தத் திட்டத்தை நிராகரித்து டல்லஸ் கூறியதாவது:

"கிழக்கு ஜெர்மனியில் சுதந்திரமாக தேர்தல்கள் நடந்தால் கிழக்கு ஜெர்மனியர் தங்கள் மேல் திணிக்கப்பட்டுள்ள தற்போதைய ஆட்சியை நிராகரித்து விடுவார்கள் என்ற பயம் மாலடோவுக்கு இருக்கிறது. இதனாலேயே சுயேச்சை தேர்தல் திட்டத்தை நிராகரித்து, சோவியத் பகுதியை விரிவு படுத்தும் நோக்கத்துடன் இந்தப் புதுத் திட்டத்தைக் கொணர்ந்திருக்கிறார். சோவியத் இராணுவத்தை கிழக்கு ஜேர்மனியில் நிறுத்தி யிராவிட்டால் அவர்களே இந்த சோவியத் கைப்பாவை சர்க்காரை நிராகரித்திருப்பார்கள். ஜனநாயக ஸ்தாபனங்களுக்கு அதிகப் பங்கு தருவதாக மாலடோவ் சொல்லுகிறார். மாறுவேடத்தில் கம்யூனிஸ்டு நோக்கங்களை நிறைவேற்றுவதே இதன் நோக்கம். இந்தத் திட்டத்தின் மூலம் சோவியத் பகுதியை ரைன் நதி வரையில் கொண்டு வந்து, மேற்கு ஜெர்மனி மீது ஆதிக்கம் கொள்வதுதான்," என்றார்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 6—2—54 சனி

'மடமையே! நீ, வாழி!'

"2,000 சதுர கெஜத்துக்கு, ஒரே கோரக் காட்சியாக இருந்தது!"

"பிணங்கள், பல்வேறு கோணங்களில் சிதறிக் கிடந்தன!"

"அலைகளில் உருத் தெரியாது, கூழாகிப்போன சவங்களும் உண்டு!"

"குழந்தைகளும், பெண்களுமே மரித்தவர்களிசு பெரும் பகுதியினர்!"

"மரித்த பக்தர்களின் செருப்புகள், ஆடைகள் முதலியன அங்கு சிதறுண்டு கிடந்தன!"

"தங்களைத் தாங்கி வந்த முடவர்கள், சேய்களை ஏந்திய வண்ணமிருந்த தாய்மார்கள் ஆகியவரின் செத்த உடல்கள் மணிக்கணக்கில் அங்கு கிடந்தன!"

"பக்தர்கள், மக்கள் கூட்டத்தின் காலடியில் சிக்கி எறும்புபோல் நசுக்குண்டனர்!"

"நசுக்குண்டவர் எழுப்பிய இறுதிக் கூக்குரல், கூட்டத்தினர் கூச்சலால் மங்கிவிட்டது!"

"இயந்திரத்திற்கிடையில் சிக்கிய தானியம்போல், பக்தர்கள் தூளாக்கப்பட்டனர்!"

"இப்படி மாண்டவர் தொகை, 1000-த்துக்குக் குறையாது!"

"போலீசார் தரும் கணக்குப்படி இறந்தவர் தொகை 315 தான்!"

"அவர்களில் 252 பெண்கள்—49 ஆண்கள்—14 குழந்தைகள்!"

* * *

மனிதப் பண்பு பட்டுப் போகாத எவர் உள்ளத்தையும் உருக்கச் செய்யும் சோகச் செய்தி இது. இதைக் கேட்ட எவர் நெஞ்சும் ரத்தக் கண்ணீர் சொரிந்தே தீரும்.

நாட்டு விடுதலைப் படையினர், உயிரினும் பொன்னான நாட்டுச் சுதந்திரத்திற்காக, தம் உயிர் உடல் துறந்த போர்க்களச் செய்தியா இது! செத்தவர் தியாகத்தைப் போற்றிப் புகழவும், வீரத்தைப் பாராட்டி நிலையான நினைவுச் சின்னம் எழுப்பவும்?

எதிரியின் படையெடுப்பால் ஊர் தீப்பற்றி எரியும் காலை, செந்தணலில் சிக்கிய பாவையரையும், பூவையரையும் மீட்பதில், தம் இன்னுயிரையும் பொருட்படுத்தாது பணியாற்றியபோது பட்டுப்போன மாண்புமிக்கவர்களா, நாம் வாழ்த்துக் கூறவும், பொன்னெழுத்துக்களால் சிறப்பான வரலாற்றுக் காதை புனைந்து வைத்துக் காக்கவும்?

ஏன் இறந்தனர் இந்தத் தாய்மார்கள்? எப்படி இறந்தனர்? எங்கே இறந்தனர்?

கங்கையும், யமுனையும் கலக்கின்ற இடமாம்! பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பமேளாவாம்! உத்திர பிரதேசத்தில் உள்ள அலகாபாத் அருகாமையிலாம்!

இந்த முறை நடைபெற்றக் கும்பமேளாவில், என்றும் நேர்ந்தறியாத புதியதோர் சம்பவம் நிகழ்ந்துவிட்டதாம்! அதாவது, சூரியன் - சந்திரன் - வியாழன் ஆகிய மூன்று கிரகங்களும் ஒன்றுகூடும் கிடைத்தற்கரிய பெரும் பேறும்!

இந்தப் பெரும் பேறு நூற்றுக்கணக்கான பெண்களின் உயிரைப் பலி கொண்டது! சிறு சிறு குழவிகளின் ஆவியைக் குடித்தது! பல ஆண்களின் மூச்சை உடலைவிட்டுப் பிரித்தது!

அங்கு கூடிய பக்தசிகாமணிகளின் தொகை ஏறத்தாழ 40 லட்சம் இருக்குமெனக் கணக்கிடப்படுகிறது. இவ்வளவு மக்களும் அங்கு எதற்காகக் கூடினர்? உலக அறிவைக் கற்கவா? விஞ்ஞானப் புதுமையைக் கண்டு மகிழவா? வாழ்க்கை நலன்கள் பலவற்றையும் பெற இலகுவான முறை காணவா? இவ்வளவும் மாய உலகத்தின் காமச் சேட்டைகளல்லவோ? இன்று இருந்து நாளை அழியும் இகசுகத்துக்காகவா இந்தியத் துணைக்கண்டத்து மக்கள் தம்மறிவை அலைய விடுவர்? இவைகளை எல்லாம் 'காயமே இது பொய்யடா!' என்று நம்பிக் கிடக்கும், நாத்திகம் பேசி நாத்தழும்பேறித் திரியும் ஞான சூனியர்களல்லவோ பெரிதெனக் கொள்ளுவர்?

'பல பிறவிகளிலும்' தங்கள் செய்த கர்மவினைகளைத் தொலைக்கவும், இப்பிறவியில் இயற்றும் பாவங்களைக் கழுவிக் கொள்ளவும். 'பிறவிப் பெருங்கடல் நீந்தவும்,' லட்சக் கணக்கில் கூடினர் மக்கள் அங்கே! நிற்க,

அந்தக் கும்பமேளாவில். நிர்வாண நாகர் சாதுக்களின் ஊர்வலம் ஒன்று நடந்ததாம்! அதை இருமருங்கிலும் லட்சக்கணக்கான ஆண்களும், பெண்களும் கூடிக்கொண்டு வேடிக்கைப் பார்த்தார்களாம்! அவர்களிலே சில பெண்கள், நிர்வாண தடி நாகர்களின் காலடி மண்ணை எடுக்க முயன்றனராம்! அதைக் கண்ட அந்தத் தடிச் சாதுக்களுக்குக் கோபம் வந்து, அவர்கள் கையில் வைத்திருந்த தடிகளையும் ஈட்டிகளையும் பொதுமக்கள் மீது வீசினராம்! மக்கள் வெருண்டோட ஆரம்பித்தனர். கொடிய அழிவு, தனது கோரத் திருவிளையாடலை ஆடத் தொடங்கிவிட்டது. உயிரிழந்தனர் 1000 மக்கள்! கால் இழந்தோர், கைமொடிந்தோர், காதறுந்தோர், விரல் முறிந்தோர், மேலும் பல நூற்றுக்கணக்கில் உண்டு!

நாட்டு விடுதலைக்கு, மக்கள் பட்ட பாட்டின் வீர விளைவல்ல இந்த அலங்கோலம்! பிற உயிர் காக்க ஈடுபட்டதின் பலன் அல்ல இந்தச் சோகச் சம்பவம்!

மடமைக்கு மக்கள் கொடுத்த அவசியமற்ற பலி இது! அறியாமைக்கு மக்கள் தந்த விலை இது! மதவெறிக்கு மக்கள் ஈந்த காணிக்கை இது!

மக்களுக்குள்ள கருத்துக் குருட்டால் நிகழ்ந்த கோமாளிக் கோரக் கூத்து இது!

இந்தக் கோரச் சம்பவம் ஆளவந்தார்களுக்கு அரியதோர் படிப்பினையாக அமையவேண்டும். அப்பொழுதுதான், உண்மையான கடவுள் நெறியைத் தெரிந்துகொள்ளும் ஒரு அரிய வாய்ப்பு மக்களுக்குக் கிடைக்கும்.

ஆனால் குடியரசுத் தலைவராக உள்ள டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்களோ 'இதோ முழுக்குப் போடுகிறேன் எங்கள் பிறவிக் கடல் நீந்த' என்று குதூகலத்துடன் 'புனித ஸ்நானம்' செய்யும் பேறு பெற்றவராக இருக்கிறார்!

அவர் வீற்றிருக்கும் உயர் பதவிக்கு எந்தவிதக் களங்கமும் குறைவும் இல்லாமல், ஆங்கிலக் கல்வி மூலம் அறிவியல் கற்றுள்ள அவருக்கும் நிர்வாண கோலம் பூண்டு முழுக்குப்போட அங்கு வந்த நாக சாதுக்களுக்கும், இந்தத் துறையில், எந்தவித வித்தியாசம் இருப்பதையும் நம்மால் காண முடியவில்லை என்பதை வெட்கத்தோடு அறிவித்துக் கொள்ளுகிறோம்.

குடியரசுத் தலைவரின் போக்கே இப்படி பழங்காலக் கருத்தில் படிந்துபோய்க் கிடக்கிறது என்றால், சாதாரண குடியடைகளின் அறிவு நிலையைக் குறித்துச் சொல்லாமல் விடுவதே நலம்.

சம்பவம் நடந்த இடம் குறுகலாக இருந்ததால்தான் இந்தக் கொடுமை நிகழ்ந்துவிட்டதாக, நடந்துள்ள கோரச் சம்பவத்திற்கு இடத்தை நொந்துகொள்ளுகிறார் ஆரியாவின் ஜோதி! இடத்தின் குறுகல்தான் அந்தப் புரட்சி வீரருக்குப் பட்டதேயல்லாது, கும்பமேளா நடைபெறுவதற்கே காரணமாக இருந்த மக்களின் போதாத அறிவுக் குறுகல் அவர் கண்களில் படவில்லை!

இந்தக் கும்பமேளா, மூதல்தரமான காட்டுமிராண்டித்தனமென அந்த மனிதகுல மாணிக்கத்திற்குப் படவில்லை! திராவிடரின் இன எழுச்சிதான் காட்டுச் செயலாக அவருக்குப் பட்டது! ஆம்! அவரிடம் பதவி இருக்கிற வரையில் அவருடைய அறிவு நிலையும் அப்படிதான் இடங்கிக் கிடக்கும்!

நாட்டில் கும்பமேளாக்கள் நடந்துகொண்டே இருந்தால்தான், மக்களும் கருத்துக் குருடர்களாகவே நிரந்தரமாக இருப்பார்கள் அந்தச் சூழ்நிலை நீடித்தால்தான், தன் கை சிக்கிய அதிகாரமும் ஆட்டமனத்தைக் காணாமலே இருக்கும்! இந்த அரசியல் யூகத்தை அவரும் நன்கு தேர்ந்துள்ளவர்தானே? எனவே, அவரும், அவர் நிலையில் உள்ளாரும் 'மடமையே! நீ, வாழி!' என்றுதான் மடமையை மக்களிடம் நீண்ட கால குத்தகைக்கு விட்டு வைப்பர்! இதில் ஆச்சரியமொன்றுமில்லை!

எதையாவது காட்டியும், மக்களின் பொது அறிவைக் குறித்து நாம் பெரிதும் கவலைகொண்டிருப்பதாலதான், ஆச்சாரியார் சதித் திட்டமான புதிய கல்வித் திட்டத்தின் அபாயத்தை நம்மால் நன்கு உணர்ந்துகொள்ளமுடிகிறது. எனவே, 'மடமையே! நீ, வாழி!' என்று கூறாமல் கூறும் புதிய கல்வித் திட்டத்தை, இதற்காகவும் நாம் பலமாக எதிர்க்கிறோம்.

சிவில் சப்ளை இலாகா பேசுகிறது கேளீர்!

சென்னை, பிப். 6—

நகர கிடங்குகளிலிருந்து தானியம், மற்றும் இதர பொருள்கள் திருட்டுப் போகாமல் காப்பாற்ற கூர்க்கர்களைக் காவல் போட சர்க்கார் சிவில் சப்ளை இலாகா உத்திரவிட்டுள்ளது.

23 கிடங்குகளில் ஒவ்வொன்றுக்கும் மூன்று காவல்காரர்கள் இருக்கிறார்கள். பிப்ரவரி 1-ந் தேதிக்கு முன் 11 கூர்க்காக்கள் இருந்தனர்; கூர்க்காக்களுக்கு இனி சம்பளம் ரூ 50 ஆக தரப்படும். சாதாரண காவல்காரர்களுக்கு ரூ 30 சம்பளம்.

தேர்தல் நியமன பத்திரம்

சர்க்கார் ஊழியர் பிரேரிக்கலாம்— சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு

புதுடில்லி, பிப் 4—

ஒரு சர்க்காரின ஊழியரால் பிரேரிக்கப்படும் அல்லது ஆமோதிக்கப்படும் நியமனப் பத்திரத்தை செல்லுபடி ஆகாதென கருதமுடியாது என ஒரிசா முன்னாள் மந்திரி ராஜ்கிருஷ்ண போசின் தேர்தல் செல்லாதென கட்டாக் தேர்தல் மன்றம் பிறப்பித்த உத்தரவை சுப்ரீம் கோர்ட் ரத்து செய்து தீர்ப்பளித்தது. மேலும் கூறுகையில் எல்லா அம்சங்களையும் ஆராய்ந்து மறுவிசாரணை நடத்தும்படி அம்மன்றத்திற்கு உத்திரவிடும்படி தேர்தல் கமிஷனுக்கு கட்டளை பிறப்பித்தது.

சென்னை மாநிலத்தில் 7,849 கோவில்கள்!

அவைகளின் ஆண்டு வருமான விவரம்

சென்னை, பிப். 5—

சென்னை மாநிலத்தில் சுமார் 7,849 கோவில்கள் உள்ளன. இவைகளில் பெரும்பாலும் தஞ்சை ஜில்லாவிலேயே உள்ளன. இவைகளில் 7,576 கோவில்களுக்கு ரூ 20,000 வரையிலும் ஆண்டு வருமானம் கிடைக்கின்றன 111 கோவில்களுக்கு ரூ. 20,000 முதல் ரூ 60,000 வரை கிடைக்கிறது. 41 கோவில்களுக்கு ரூ. 60,000-க்கு மேல் கிடைக்கிறது.

காந்திஜி சமாதான பரிசு!

ரூ 50 லட்சம் திரட்டப்படும்

புதுடில்லி, பிப். 6—

காந்திஜி சமாதானப் பரிசு நிதிக்கு ரூ 50 லட்சம் வரை திரட்டப்படவிருக்கிறது. இதற்கான முதல் காணிக்கையை குடியரசுத் தலைவர் ராஜன் பாபு செலுத்துவார்.

பரிகாரமல்ல—பச்சாதாபம்!

தெஹரான், பிப். 6—

ஈரான் மன்னர் தனக்குச் சொந்தமான நிலங்களில் சிலவற்றை விவசாயிகளுக்கு நன்கொடையாக அளித்துவிட்டார்.

திரு.வி.க. மணி மண்டபம்

கால்கோள் விழா நிகழ்ச்சி

சென்னை, பிப். 5—

5—2—54 காலை 9-30 மணிக்கு திரு. பி. டி. ராஜன் அவர்கள் தலைமையில், இராயப்பேட்டை ஞானானந்த நிலையத்தில் மறைந்த தமிழ்ப்பெரியார் திரு. வி. க. மணிமண்டபம் கால்கோல் விழா நடைபெற்றது.

திரு பி டி ராஜன் அவர்கள் தனது தலைமையுரையில் திரு. வி. க. அவர்களின் சிறந்த பணிகளைப் பற்றிக் குறிப்பிட்டார். தொழிலாளர்கள் நலம் பற்றியும், மொழி, சமயம் வளர்ச்சி கருதியும் தன்னலம் கருதாமல் உழைத்த பெரியாருக்கு நமது அன்பையும், நன்றியையும் அறிவிக்கும் அடையாளமாகவே இங்கு 'திரு. வி. க. மணிமண்டபம்' கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

திரு. எஸ். சச்சிதானந்தம் அவர்கள், விழாவிற்கு வந்திருந்தோரனைவரையும் வரவேற்று சொற்பொழிவாற்றினார்.

முதலமைச்சர் சி. இராஜகோபாலாச்சாரியார்; திரு. வி. க. மணிமண்டபக் கல் நாட்டு விழாவைத் துவக்கி வைத்து, திரு. வி. க. அவர்கள் செய்த சேவைகளைக் குறிப்பிட்டுப் பேசுகையில், அவர் நினைவாக மணிமண்டபம் கட்ட முன்வந்தவர்களுடைய அன்பையும், நன்றியுடைமையையும் பாராட்டி ஒரு ஆண்டுக்குள் மணி மண்டபம் முடிந்து விடலாம் என்றும், இது எல்லோருடைய பேரன்புக்கு அடையாளமாக இருக்கும் அவர் கொண்ட அறநெறியை நினைவுபடுத்திக் கொண்டிருக்க வேண்டுமென்றும் விரிவுரையாற்றினார்.

தலைவர் முடிவுரைக்குப் பிறகு கல்கி திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நன்றி கூறினார்.

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் உண்டியல் மூலம் ரூ. 145 வசூல் செய்யப்பட்டதை அறிவித்தார்.

நகை வியாபாரி திரு. கோவிந்தராஜுலு நாயுடு அவர்கள் ரூ 1001 செக் ஒன்றும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளைப் பலர் படம் எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

கிராமக் கைத்தொழில்கள்

வளர்ச்சி பெற சிபார்சு!

சென்னை, பிப். 6—

கிராமங்களில் தயாரிக்கப்படும் பொருள்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கவும், அவைகள் நன்கு வளர்ச்சி பெறவும் அகில இந்திய காதி—கிராமக் கைத்தொழில் போர்டு ஆராய்ச்சிக் கமிட்டி பல யோசனைகளை சென்னை சர்க்காருக்குத் தெரிவித்துள்ளன.

விவசாயத் துறையில் கழிக்கப்படும் பொருள்களை எப்படிப் பயன்படுத்துவதென்பது விஷயமாகவும், தொழில்களைக் கூட்டுறவு முறையில் நிர்வகிக்கவும் போர்டு சிரத்தை எடுத்துக் கொள்ளும்.

எஞ்ஜினைக் கவிழ்த்த எருமை!

பதிண்டா, பிப். 5—

அம்பாலா நோக்கி போய்க் கொண்டிருந்த ரயில் என்ஜின் வட பகுதி ரயில்வே பதிண்டா ஸ்டேஷனருகில் இரு எருமைகள் மீது மோதி தடம் புரண்டது. ஆள் சேதம் எதுவுமில்லை. சில மணி நேரம் ரயில் போக்குவரத்து தடைபட்டது.

தென்னாட்டைச் சுரண்டும் வடவர் ஆதிக்க வெறி

'பிரிந்தாலன்றி வாழ்வில்லை' என்ற பதில்தான் முடிவுறும்

காங்கிரஸ் 'வாரச் செய்தி'யின் கண்டனம்

"தோழர் ஜி. டி. நாயுடு, உலகறிந்த ஒரு விஞ்ஞான மேதை; சிறந்த தொழில் நிபுணர்; அவர் கூறுகிறார்—"தென்னாட்டிற்கென்று தனி அரசும், அதிகாரங்களும் இருந்தாலன்றி நம் நாட்டில் தொழில் வளம் பெருக, வடநாட்டார் சம்மதிக்க மாட்டார்கள்"—என்று."

'வரவரத் தென்னாட்டுப் பெருமக்கள் பலர் இந்தக் கருத்தை வெளியிடத் தொடங்கி விட்டனர் இதைப் பார்க்கும்போது "வடக்கு வளர்கிறது; தெற்குத் தேய்கிறது" என்று கூறுவதில், குறுகிய மனப்பான்மையோ, விரோத உணர்ச்சியோ துளிக்கூட இருப்பதாகத் தெரியவில்லை. மத்திய அரசியலாரின் போக்கும் தென்னாட்டுப் பிரிவினையை வலியுறுத்தும் விதத்தில்தான் அமைந்திருக்கிறது என்றால், அதை யாரும் மறுப்பதற்கில்லை. மத்திய அரசியலாரின் இப்போக்குப் பற்றி நாம் ஏற்கெனவே பல முறை குறிப்பிட்டிருக்கிறோம். அண்மையில் ஒரு செய்தி வெளியாகியிருக்கிறது—'தெற்குத் தேய்கிறது; வடக்கு வளர்கிறது' என்பதையுணர்த்தும் வகையில்.

'தென்னாட்டில்-பெங்களூரில் 1923-ல் திறவப்பெற்று, ஒரு சிறந்த பள்ளியாகவும், பால் பண்ணை ஆராய்ச்சிக்கு நாட்டின் முதலிடமாகவும் பணிபுரிந்து வருகிறது பால் ஆராய்ச்சிப் பண்ணை யொன்று; அண்மையில 'இந்து'வில் வெளியாகியுள்ள 'கடிதம்' ஒன்றிலிருந்து, 'வட இந்தியாவில் ஏதேனும் ஓரிடத்திற்கு அந்தப் பால் ஆராய்ச்சிப் பண்ணையை மாற்றிவிட இந்திய சர்க்கார் எண்ணி, அதற்கென அமைக்கப்பெற்ற குழு. வட இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து வருவதாகத் தெரிகிறது என்றும், டில்லிக்கருகில் ஏதாவதொரு இடமே சிறந்ததெனக் கருதப்படுவதாகத் தெரிகிறது." என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது

"இப்படியே, இங்கு தென்னாட்டிலுள்ள மிகச் சில ஆராய்ச்சி நிலையங்களும், தொழிற்சாலைகளும் வடக்கே மாற்றப்பட்டுவிடுமானால், தென்னாடு தேயாமல் என்ன செய்யும்?

"இவ்வாறு வடக்கை வாழவைத்துத் தெற்கைத்தேயச் செய்கிற மத்திய அரசியலாரின் போக்கு, "பிரிந்தாலன்றி வாழ்வில்லை,' என்று தென்னாட்டார் ஒவ்வொருவரும் உணர்கின்ற நிலைமையையே உண்டாக்கும் என்பதை மத்திய அரசியலார் உணர வேண்டும். விஞ்ஞான வித்தகர்தோழர் ஜி. டி. நாயுடு நடத்திய 'உடைப்புச் செயல்' மத்திய அரசியலாரை உணர வைக்கும் என்றே நம்புகிறோம்."

—'வாரச் செய்தி' 3-2-54

தாராவி தமிழ்ப் பள்ளி கட்டிட நிதிக் குழு

பம்பாய், பிப். 5—

"23—1—54ல், புத்தாண்டு நிர்வாகக் குழுத் தேர்தல் தோழர் எம். வி. துரைசாமி தலைமையில் நிதிக் குழுப் பணிமனையில் நடைபெற்றது. அதுபோது, தோழர் எம். வி. துரைசாமி தலைவராகவும்; என் பி பால்ராஜ் துணைத் தலைவராகவும்; என். ரத்தினம் பொதுச் செயலாளராகவும்; என். திபாகரசன், எஸ். வள்ளிநாயகம் கூட்டுச் செயலாளராகவும்; என். பி. பெரியசாமி பொருளாளராகவும். என். எம். எஸ். சுப்பையா துணைப் பொருளாளராகவும்; ஆரியசங்கரன், ஏ. எஸ். ஆறுமுகம், கே. வி. பூ. மூர்த்தி; பி. பாலசுந்தரம், ஏ. நி ஜேசுதாசன், கே. முத்துமாலை, எம். கே. சுப்பையா, ஆ கமலநாதன், ஆர். ராஜா, ஆ துரைராஜ், ஆகியோர் நிர்வாகக் குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்." என்று செயலாளர் என். தியாகராசன் எழுதுகிறார்.

ஆதி திராவிட மகாஜன சங்கம் (பம்பாய் கிளை) திறப்பு விழா

திருநெல்வேலி மாவட்டம் ஆதிதிராவிட மகாஜன சங்கம், பம்பாய் கிளையின் திறப்பு விழா 25—1—54ல், வாழைக் கட்டவாடி மைதானத்தில் தோழர் மா. பா. மந்திரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ் திபாகராசன் கூட்டத்தைத் துவக்கி வைத்தார் வி என். ராஜ் வரவேற்றுப் பேசினார். என் எம் சுப்பையா, தொல்காப்பியன், பத்மனாபன், நெல்லை இரா. இளவழுதி, வி. எஸ். டி ராஜ, சு வள்ளிநாயகம், பெ மந்திரமூர்த்தி, ஆகியோர் சங்க வளர்ச்சி, சமூக சேவை பற்றிப் பேசினர். இறுதியில் 'தினமணி' ஆசிரியர் தோழர் ஏ. என். சிவராமன் "தாழ்த்தப்பட்ட மக்களும், இந்திய அரசியல் திட்டமும்" என்பது பற்றி சொற்பொழிவாற்றினார். தோழர் ஏ. எஸ். பெருமாள் நன்றி கூறினார்.

தஞ்சை அரசினர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி உணவு விடுதி ஆண்டு விழா

31—1—54 மாலை 5 மணிக்கு மேற்படி விழா கொண்டாடப்பட்டது தோழர் இரா. சண்முகம் தலைமை வகித்தார்; தோழர் டி. என் வைத்தியநாசாமி அனைவரையும் வரவேற்றார், தோழர் இர. செயராமன் ஆண்டறிக்கை வாசித்தார். பின்னர், திரு வி. க. படத்தை விழாத் தலைவர் திறந்து வைத்துப் பேசினார்.

அடுத்து மாணவ ஆசிரியர்களால் பல மாறுவேட நிகழ்ச்சிகளும், இரு சிறு நாடகங்களும். உடற்பயிற்சிகளும் நடத்தப்பட்டன தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் எம். செல்வராஜ் சபாண்டின் நன்றி கூறினார். பின்னர். தோழர் எஸ். கோமதிநாயகம் இன்னிசை விருந்தளித்தார்.

என். வி. நடராசன் சுற்றுப் பயணம்

★

பிப். 7: திருப்பத்தூர் (வ ஆ)
" 14: விழுப்புரம்
" 21: காங்கேயம்
" 22: ஊத்துக்குளி
" 27: பெண்ணாத்தூர்

பிப், 7 காங்கேயம்—திருத்தம்

"ஓரே ஆசை"

வேப்பம்பட்டியில் நாடகம்

20—1—54ல், மதுரை மாவட்டம், வேப்பம்பட்டி தி. மு. கழகத்தின் ஆதரவில், தோழர் எம் அய்யாசாமி தலைமையில் "ஓரே ஆசை" என்ற நாடகம் நடத்தப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களித்தனர் நாடக முடிவில் மதுரை மு. வசனப்பித்தன் பேசினார்.

வேப்பம்பட்டி தி மு கழகச் செயலாளர் தோழர் செ. கணபதி அவர்களின் ஆண் குழந்தைக்கு தோழர் அய்யாசாமி அவர்களால் நாடக மேடையில் "இளங்கோவன்" என்ற பெயர் சூட்டப்பட்டது.

நாடகம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு தோழர்கள் எஸ். ராமய்யா, செ. கணபதி, கருப்பையா கோவிந்தராசு மற்றும் தி மு. க. தோழர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

'அன்புமணி' உதயம்

பழனி, பிப். 3—

14—1—54-ல், தோழர் கே. பி. தங்கமணி அவர்களின் குழந்தைக்கு, தோழர் அ. தமிழரசு அவர்களால் "அன்புமணி" எனப் பெயரிடப்பட்ட பின், சிற்றுண்டி வழங்கப்பட்டது. பின்னர், பழனி இளமதி நாடக மன்றத்தாரின் இன்னிசை நடைபெற்றது.

சீர்திருத்தத் திருமணம்

திருத்துறைப்பூண்டி, பிப் 5—

23—1—54 காலை 10-30 மணியளவில், இவ்வூர் விஜயா நாடகக் கொட்டகையில், தோழர் சந்தானத்திற்கும், தோழியர் பாக்கியத்திற்கும் தோழர் வ ஆர். சமத்துவம் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் என். அப்துல்லா, ஆறுமுகம், வீ. போ. பழனிவேலன் ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசினர். பி. காலசாமி நன்றி கூறினார். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றியுடையது — பொறுப்பாளர்.

ஐதராபாத்திற்கு ஒரு பெண் மந்திரி

ஐதராபாத், பிப். 4—

ஐதராபாத மாநிலத்தில் 8 உதவி மந்திரிகள் நியமிக்கப்பட்டனர். இந்தியாவிலுள்ள மாநில சர்க்கார்களில் உதவி மந்திரிகள் நியமனம் செய்வது இதுதான் முதல்முறை என். இலக்குமிபதி பாய் என்ற பெண்மணிக்கும் உதவி மந்திரி பதவி கிடைத்திருப்பதாகத் தெரிகிறது.

ஜில்லா போர்டுகள் அகற்றப்படுகிறது

—— (:) ——

ஆந்திர அமைச்சர் குழுவின் முடிவு

கர்னூல், பிப் 4—

ஆந்திர மாநிலத்தில் உள்ள ஜில்லா போர்டுகளை அடியோடு அகற்றிவிடுவது என அமைச்சர் குழு முடிவிற்கு வந்து இருக்கிறது.

ஜில்லா போர்டு நிர்வாகத்தை ஒரு முடிவிற்குக் கொண்டுவர மேலும் கொஞ்சம் காலம் தேவை இருப்பதால், இப்போதுள்ள ஸ்பெஷல் ஆபீசர் நிர்வாகக் காலத்தை மேலும் ஓராண்டு காலத்தக்குக் கூட்டுவது எனவும் அமைச்சர் குழு முடிவிற்கு வந்து இருக்கிறது.

உத்தியோகக் கால நீடிப்பிற்கான மசோதா ஒன்றை வருகிற சட்டசபைக் கூட்டத்தில் கொண்டுவரப்படும் எனத் தெரிகிறது

மார்ச் மாதம் வெளிவருகிறது!

முரசொலி

வார இதழ் — விலை இரண்டணா
ஆண்டு சந்தா: ஆறு ரூபாய்

★

ஆசிரியர்:

மு. கருணாநிதி

★

எல்லா ஊர்களிலும் பிரதி ஒன்றுக்கு எட்டணா முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் உடன் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

★

விபரங்கட்கு:

நிர்வாகி: "முரசொலி",
1/1, ஜக்ரியா காலனி 2-ம் தெரு,
சென்னை - 24

திருச்சி (பெரியகடைவீதி) தி. மு. கழகம்

—o—

போங்கல் விழா வரவு – செலவு விவரம்

17—1—54 காலை 9 மணியளவில் பெரிய கடை வீதி தி. மு. கழக ஆதரவில், திருச்சி தேவர் மன்றத்தில் தோழர் மதிவாணன் தலைமையில், தோழர்கள் மு. கருணாநிதி, கண்ணதாசன், அம்பில் – தர்மலிங்கம், எம். எஸ். மணி, எஸ். செழுமாறன் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பொங்கல் விழா வரவு - செலவு விபரம்:—

சொற்பொழிவாளர்கள் போக்குவரத்து செலவு	36—0—0
தேவர் மன்றம் வாடகை, ஆட்கள் இதும் செலவு	26—4—0
ஒலிபெருக்கி அனுமதி கட்டணம் செலவு	2—0—0
ஒலிபெருக்கி, வண்டி வாடகைச் செலவு	11—4—0
சுவரொட்டி, துண்டு விளம்பரம், நன்கொடைச் சீட்டு, சுவரொட்டி ஒட்டு கூலி	31—0—0
தபால் செலவு, சாயம், பேப்பர் செலவு	3-10—0
விளம்பரச் செலவு—வண்டி வாடகை, இதர செலவுகள் வகையில்	10-15—0
சாப்பாட்டுச் செலவு	16—7—0
ஆக கூடுதல் செலவு	137—7—0
வரவு - நன்கொடைச் சீட்டு வகையில்	215—0—0
நன்கொடை வசூல்	3—0—0
ஆக கூடுதல் வரவு	218—0—0
செலவு	137—8—0
மீதம் ரு.	80—8—0

மீதம் ரு. 80—8—0-ம் பெரிய கடை தி. மு. கழக படிப்பகத்திற்கு தோழர் ஜி. கே. ராசாராமனிடம் நன்கொடையாக அளிக்கப்பட்டது.

கூட்டத்தில் உண்டியல் மூலம் வசூலான தொகை ரு 56-ம், கல்லக்குடி நிதிக்காக தோழர் கண்ணதாசனிடம் ஒப்படைக்கப்பட்டது.

நியூயார்க், பிப். 5—

கடந்த ஆண்டு அமெரிக்காவில் தினசரி பத்திரிகைகள் 4,54,72,286 பிரதிகள் விற்கப்பட்டுள்ளன. காலையிலும் மாலையிலுமாக தினசரி 1785 பத்திரிகைகள் இவைகளை வெளியிட்டன.

ஆரணி பொங்கல் விழா பொதுக்கூட்டங்கள்

30—1—54 மாலை 5 மணிக்கு தி மு கழகச் சார்பில் தோழர் கே. பி. சுந்தரம் தலைமையில் பொங்கல் விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர்கள் செ. டி. குப்புசாமி, அ. ப. நடராசன் டி. கே. தாமரைச் செல்வன் ஆகியோர் பேசினர்.

• • •

பெரியபாளையம் ஆரணியில், திருவள்ளுவர் திடலில், நகர கலைக் கழகத்தின் சார்பில், 31—1—54ல், தோழர் மா. சு. சம்மந்தம் தலைமையில் பொங்கல் விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் உமார், வி எஸ். கோவிந்தராசன், முரவை-ஆர். எஸ் பாண்டியன் ஆகியோர் பேசினர். தமிழர் பகுதியும், தெலுங்கர் பகுதியுமாக மக்கள் தொகையுடைய ஆரணியில் வரும் ஆண்டு, தமிழரும்-தெலுங்கரும் சேர்ந்து பொங்கல் விழாவை திராவிடர் திருநாளாகக் கொண்டாட வேண்டுமென தோழர் குமார் என்ற தெலுங்குத் தோழர் தெலுங்கில் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் உண்டியல் மூலம் வசூலான ரு 3—12—9ம், கலைக் கழகச் சார்பில் ரு 5-ம், கல்லக்குடி நிதிக்கென தோழர் முரவை — பாண்டியனிடத்தில் தரப்பட்டது.

கண்டியில் பொங்கல் விழா

மாபால தி மு. கழக சார்பில் தோழர் நம்பிக்கை தலைமையில் 17—1—54 மாலை 3 மணியளவில், ஜின்னு நினைவு மண்டபத்தில் பொங்கல் விழாக் கொண்டாடப்பட்டது. தோழர்கள் ஏ. அழகுசுந்தரம், பி நிலவழகன் பண் பாடினர். தலைமையுரைக்குப் பின், தோழியர் எஸ். குஞ்சுமணி, தோழர்கள் குலசேகரன், கலாநேசன், மா. சி. அருள், க. ப. இளம்வழுதி, சாத்துக்குடித் தம்பி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தலைவர் முடிவுரைக்குப் பின், தோழர் கே. பி மதியழகன் நன்றி கூறினார்.

படிப்பினை!

இஸ்தான்புல், பிப். 5—

துருக்கியில் ஏராளமாகக் கோதுமை உற்பத்தியாகின்றது. மொத்த உற்பத்தி 1 கோடி 40 லட்சம் டன்களாகும். இதில் பெரும் பகுதி ஏற்றுமதிக்காக ஒதுக்கப்படும்.

கொடுங்கோலரின் கடுங்காவலில் கல்லக்குடி அறப்போர் வீரர்கள்

பஞ்சாயத்தாரின் தீர்ப்பு பாராளவோருக்குப் பாடம் கற்பித்திருக்க வேண்டுமே?

(:)

ஆச்சாரியார் அறிவுப் பணியைப் பழிக்கிறார்— அர்த்தமற்ற செயலை ஆதரிக்கிறார்

(:)

நாம் அறவழியில் ஈடுபட்டோம்— ஆச்சாரியார் அநாகரிகத்தில் ஈடுபடுகிறார்

கழக முன்னணி வீரர்களின் முழக்கம்

சென்னை, பிப். 6—

சென்னை சோமளீஸ்வரன் பேட்டை (31-வது வட்ட) தி.மு. கழக ஆண்டு விழா நேற்று தோழர் ஏ. கோவிந்தசாமி, எம் எல்,ஏ தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தோழர்கள் இளவரசு, பொன்னம்பலனார், இளம்வழுதி, மதியழகன், அண்ணாதுரை ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கூட்டத்தின் இறுதியில் அத்தக்குடி நிதிக்கு ரூ. 101 கொண்ட பணமுடிப்பொன்று கழகச் செயலாளர் தோழர் இளஞ்சேரலாதன் அவர்களால், பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களிடம் தரப்பட்டது. கூட்டத்திற்கு சுமார் 30 ஆயிரம் மக்கள் வந்திருந்தனர்.

தலைமை தாங்கிய தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல் ஏ., குறிப்பிட்டதாவது:—

"இந்த நாட்டிற்கு விடுதலை கிடைத்து ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டதெனக் கூறுகின்றனர், ஆனாலும், இன்னும் நாட்டு மக்களிலே 100–க்கு 16 பேர்களே கல்வி அறிவு பெற்றுள்ளனர். 16 பேர்கள் படித்துவிட்டதையே பெருமையோடு இன்றும் காங்கிரஸ்காரர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்களே தவிர, எல்லா மக்களும் கல்வி அறிவு பெறுவது எப்போது என்பதை எண்ணிப்பார்த்ததாகவே தெரியவில்லை தேர்தல் காலத்திலெல்லாம், மஞ்சள் நிறத்தையோ, மாட்டு உருவத்தையோ காட்டித்தான் வோட் கேட்கிறார்களே தவிர, மனிதனைக் காட்டி அவனது கொள்கைகளைக் காட்டி ஓட்டுப்பெற முடியவில்லை இந்நிலை எவ்வளவு கேவலமானது, வருந்தத் தக்கது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டாமா? இந்நிலையிலிருக்கும் இந்த நாட்டில், ஏற்கனவே சிறுவர்களுக்குக் கிடைத்த கல்வியறிவையும் பாழ்படுத்தும் முறையில் புதிய கல்வித் திட்டமிருப்பதால் தான் நாம் அதை எதிர்க்கிறோம்.

"சட்டசபையில் இக்கல்வித் திட்ட விவாதத்தின்போது, கல்வி மந்திரி சுப்ரமணியம் அவர்கள், 3 மாவட்டங்களில் மட்டுந்தான் திட்டம் வெற்றியைத் தந்துள்ளது என்று சொன்னார். மற்ற 10 மாவட்டங்களிலும் திட்டம் என்ன ஆயிற்று என்றபோது கல்வி அமைச்சரும், ஆச்சாரியாரும் வெட்கித் தலை குனிந்தனர். அதற்குப் பிறகாவது இத்திட்டத்தை வாபஸ் பெற்றிருக்க வேண்டாமா? திட்டத்தை தேர்தல் பிரச்னையாக வைத்து சமீபத்தில் காங்கயம், விருத்தாசலம் ஆகிய தொகுதிகளில் நடைபெற்ற சட்டசபை உபதேர்தல்களில் கிடைத்த முடிவின் படிப்பினைக்குப் பின்னாவது இப்புதிய திட்டத்தை வாபஸ் பெற்றிருக்க வேண்டாமா?

"சென்ற வாரத்தில் நடைபெற்ற பஞ்சாயத்தார் மாநாட்டிலே, கல்வித் திட்ட ஆலோசகர் இராமச்சந்திரனைப் பேச வைக்க பெருமுயற்சி செய்து தோல்வி கண்ட பின்னாவது—கிராம மக்களின் பிரதிநிதிகளான பஞ்சாயத்தார்கள் புதிய திட்டத்தை எதிர்க்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டாமா? பஞ்சாயத்தார்கள் எல்லாம் தி. மு. கழகத்தவரா? இல்லையே."

அடுத்து, தோழர் இளவரசு அவர்கள் பேசினார்.

✶

அ. பொன்னம்பலனார்

"இன்று தி. மு. கழகத்தின் மீது, சுமத்தப்பட்டுள்ள பெரும்பழி அத்தக்குடி சதி வழக்கு; அதில் ஈடுபட்டுள்ள தோழர்களை மீட்கவும், கழகத்தின் கற்பெடையரைக் காக்கவும், நாமெல்லோரும் ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக்கொண்டு நிறைய நிதி உதவவேண்டும்; அதுதான், இன்று நாம், கழகத்தின் வளர்ச்சிக்காகக் காட்டும் அக்கரையாகும்.

"அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு, வழக்குகளை ஜோடித்து, கழகத்தைச் சிதைத்துவிட பகற்கனவு காணும் ஆச்சாரியார், இன்று திரு. வி. க. மணிமண்டபக் கால் கோள் விழாவில் பேசுகையிலும், நம்மைத் தூற்றிப் பேசுகிறார். அவர், "மனிதன்தான் கடவுளை உண்டாக்கினான் என்று சிலர் சொல்வதை மக்களும் நம்பி, அவர்களை ஆதரிக்கிறார்களே, என்ன மடமை? மனிதனா, கடவுளை ஆக்கினான்? கடவுளல்லவா இப்பெரும் உலகத்தைப் படைத்து, காத்து, அழித்து மீண்டும் ஆக்கி வருகிறான், இதை மறந்துவிட்டதனாலன்றோ இன்று நாட்டு மக்கள் நலிகிறார்கள்?" என்று நமது அறிவுப் பணியை தன்மான உணர்வைப் பழிக்கிறார். நாமென்ன; கடவுள் இல்லையென்கிறோமா? 'சிவாயநம வென்று சிந்திதிருப்போர்க்கு அபாயமொருநாளுமில்லை', என்பது மெய்யானால்: ஊருக்கு உழைத்து வாழ்ந்தவன், தெய்வத்தை மறக்காதவன் தேசவாளி—இன்று அவன் நிலை என்ன?—சென்னை நகர வீதியிலே, குழந்தை குட்டிகளோடு, மனைவி மக்களோடு, 'ஐயா; வாழ்ந்தவன். வீழ்ந்துவிட்டேன்; வாழ்வதற்குக் காலணா, அரையணா தாருங்கள்,' என்று பிச்சை கேட்கும் நிலைதானே இருக்கிறது! இந்த நிலையைப் போக்க 'பஜகோவிந்தம்' பாடுவதா வழி?

"ஆண்டவன்—அன்பாய், அருளாய், அறமாய், அறிவாய், அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நிகழ்பவனென்று சொல்லிவிட்டு, யானை முகனாய், ஆறுமுகனாய் நான்குமுகனாய் அவனை உருவித்து, அவனுக்கும், அவனைத் தொழுபவனுக்குமிடையில் ஒரு தரகன் ஏன்?—என்று கேட்டால் நாங்கள் நாஸ்திகர்களா?

ஆண்டவனை வழி படுங்கள்—'அப்பனே, அம்மையே—எனக்கு அன்போடு, அறத்தோடு, அறிவோடு, காமக்குரோதலோப மதமாச்சர்யங்களினின்றும் நீங்கி, மானத்தோடு வாழ நல்லறிவைத் தா; எல்லோ உயிரிடத்தும் அன்பு செலுத்தும் நற்பண்பினை எனக்கருள் என்று நன்றாக வேண்டிக் கொள்ளுங்கள். ஆனால் அந்த ஆண்டவனிடம் பேச, உங்கள் குறைகளை முறையிட இடையே தரகர் தேவையா? ஆண்டவனை ஆபாசமான உருவங்களாக்கி அவற்றின் பெயரால், காணிக்கை செலுத்த வேண்டுவதில்லையே! அக்காணிக்கையை வைத்தே வாழும் வகை தேடிக்கொண்டுள்ள உஞ்சிவிருத்திகள்—உங்கள் உழைப்பாலேயே அவர்கள் உழைக்காது வாழ்கின்றனரே! இந்த நிலையை மாற்ற வேண்டுமென்பது எப்படித் தவறாகும்? இதைச் சொன்னால் நாங்கள் நாஸ்திகர்கள், பார்ப்பனத் துவேஷிகள் என்றெல்லாம் பழிக்கிறாயே—இது நியாயமா?"

[தோழர்கள் இளம்வழுதி, மதியழகன் ஆகியவர்கள் சொற்பொழிவு அடுத்த இதழில் வெளிவரும்.]

* * *

31-வது வட்ட தி மு கழகத்தார் அத்தக்குடி நிதிக்காக ரூ. 101 தருவதாக வாக்களித்திருந்தனர். ஆனால் கூட்டத்தில் எதிர்பாராத உண்டிவசூல் ரூ 44; குமரன் நூல் நிலையத்தார் அன்பளிப்பு ஆகியவற்றை சேர்த்து ரூ 98-15-6 தரப்பட்டது. பொதுச் செயலாளர் காஞ்சியிலிருந்து வரப் போகக் கார் பெட்ரோல் வகை செலவுக்காக ரூ. 25 போக ரூ 73-15-6 அத்தக்குடி நிதியில் சேர்ப்பிக்கப்பட்டது.

மற்றும் கீழ்க்கண்டவர்களிடமிருந்தும் அத்தக்குடி நிதிக்குப் பணம் கிடைக்கப்பெற்றது:—

சிம்சன் தொழிலாளர்கள் ரூ 23-4-6; ஆயிரம் விளக்கு அறிவு வளர்ச்சி மன்றத்தார் ரூ 5-7-0; விக்கிரமாண்டி கிராம முன்னேற்ற ஊழியர் ரூ 1-0-0; குழந்தைக்குப் 'பாண்டியன்' எனப் பெயரிட்டதில் ரூ 1-0-0; பொதுச் செயலாளர் கையொப்பமிட்டதில் ரூ. 1-8-0; 31-வது வட்டத் தோழர் குப்புசாமி மூலம் ரூ. 11;—ஆக ரூ. 43-3-6.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

விளம்பரக்கம்

2-ம் ஆண்டு விழாவும் பொங்கல் விழாவும்

8—2—54 திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு, தோடி வெளியில், தோழர் ஏ. எஸ். சி. கிருஷ்ணசாமி தலைமையில், தோழர்கள் அ. பொன்னம்பலனார், என். ஏ. ரஷீத் ஆகியோர் பேசுவர். அன்றிரவு 'காதல் ஜோதி' நாடகம் நடைபெறும்.

மீ சு. இளமுருகு, பொற்செல்வி சுற்றுப் பயணம்

8—2—54 அரியலூர்
21—2—54 காட்பாடி
7—3—54 மதுரை

குற்றக் கைதிகளையும் கொள்கை வீரர்களையும் ஒன்றாக நடத்தும் கொடுமை

களி தருகிறார்களாம் களி!

சோமளீஸ்வரன்பேட்டை கூட்டத்தில் பொதுச் செயலாளர் பேருரை

சென்னை, பிப். 6—

"கல்லக்குடி அறப்போரிலே ஈடுபட்ட கண்ணதாசன், அம்பில் தர்மலிங்கம் முதலியோருக்கு ஒன்றரை ஆண்டு கடுங்காவல்—'சி' வகுப்பு—ஒரு வேளை மட்டும் அரிசி உணவு—மாலையில் களி தருகிறார்களாம் களி!"

"தோழர் தர்மலிங்கம்—அம்பில் நகர பஞ்சாயத்துக் கழகத் தலைவர்; கண்ணதாசன், இந்த நாட்டில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்குப் பிறகு, புதுமைக் கருத்துக்களை கவிதை வடிவிலே தரும் மறுமலர்ச்சி இயக்கத்தின் தூதுவர்; அந்தக் குழுவினரிலே இன்னும் பலர் வியாபாரிகள்; இன்னும் சிலர், நல்ல பல தொழிலிலே ஈடுபட்டிருந்தவர்கள்; அரசியல் போராட்டங்களிலே ஈடுபட்ட அவர்களை எல்லாம் கிரிமினல் கைதிகளாக—நாகரீகமான நல்லவர்களால் நடத்தப்படுவதேன்று பறை சாற்றப்படும் சர்க்கார்—நடத்துவது எவ்வளவு பழி வாங்கும் எண்ணத்தை உள்ளடக்கிக் கொண்டிருக்கிறதென்பதை காங்கிரஸ் நண்பர்கள்—நமக்கல்ல—அவர்கள் மனச்சாட்சிக்கு சொல்லிக்கொள்ளட்டும்."

"தி. மு கழகம், சர்க்காரின் இந்தப் போக்கை நன்றாகத் தெரிந்துகொண்டுதானிருக்கிறது ஒரு சிறந்த லட்சியத்தைக் கொண்டுள்ள நாம், சேற்றிலே உழலும் பன்றிகளல்ல! வேட்டையாடுபவனின் அம்பில் பட்டு, உயிர் விடவும் துணிந்து, உரிமையோடு துள்ளித் திரியும் புள்ளி மான்கள் நாம்!"

—இவ்வாறு சென்னை, சோமளீசுவரன்பேட்டை, 31-வது வட்ட தி. மு. கழக 4-வது ஆண்டு விழாவில், சிறப்புரை ஆற்றுகையில், பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டார். (அவருடைய பேச்சின் முழு விவரம் அடுத்த இதழில் வெளிவரும்)

தெ. ஆ. மாவட்ட கிளைக் கழகங்கட்கு

14—2—54 அன்று பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களுக்கும், மற்ற நால்வருக்கும் விழுப்புரத்தில் வரவேற்பளித்து அத்தக்குடி நிதி அளிக்க இருப்பதால், தோழர் ஏ கோவிந்தசாமியும், ஆர். பாலகுருசாமியும் கீழ்க்கண்டபடி சுற்றுப் பயணம் செய்கிறார்கள். ஆகவே, தெ. ஆ. மாவட்டக் கிளைக் கழகங்கள், அத்தக்குடி நிதிக்கு ரூ 10-ம் ஆண்டுக் கட்டணம் ரூ 6-ம் சேர்த்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பிப். 7: செஞ்சி, திண்டிவனம்
,, 8: விழுப்புரம் வட்டம்
,, 9: சிதம்பரம் வட்டம்
,, 10: விருத்தாசலம் வட்டம்
,, 11: கடலூர் திருக்கோயிலூர் வட்டம்

திருமணம்

7—2—54 ஞாயிறு காலை 4-30 மணிக்கு, காஞ்சிபுரம், யாதவர் சத்திரம், கிழண்டைராச வீதியில், தோழர் பா. அரங்கநாதனுக்கும் தோழியர் சுசீலாவுக்கும் திருமணம் நடைபெறும்.

காட்டுமன்னார்குடி தி. மு. க. கிளைக்கழக வட்டக்குழு

1—2—54ல் காட்டுமன்னார் கோவில் தி. மு க. கிளைக் கழகங்களைக் கொண்ட வட்டக் கழக குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது:— செயலாளர்: தி. பொ சொக்கலிங்கம்; துணைச் செயலாளர்: ராம ஜெயம்; பொருளாளர்: பா. வைத்திலிங்கம்; மற்றும் எட்டுபேர் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

சென்னை ஜமீன் ஒழிப்புச் சட்டம்

—O—

ஜமீன்தார்களின் அப்பீல் தள்ளுபடி

புதுடில்லி, பிப். 5—

"1948 சென்னை ஜமீன் ஒழிப்புச் சட்டத்தில் கஷ்டநஷ்ட சம்மந்தமான ஷரத்துக்கள் செல்லத்தக்கதுதான், என்று சுப்ரீம் கோர்ட்டின் அரசியல் சட்டப் பிரச்சினை குழு இன்று தீர்ப்பளித்தது

அரசியல் சட்டத்தின் கீழ் ஜமீன் ஒழிப்புச் சட்டம் செல்லத்தக்கதல்ல என்று ஆட்சேபித்து, சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பிற்கு எதிராக சென்னை மாநிலத்தைச் சேர்ந்த பல ஜமீன்தார்கள் ஒன்றாகச் சேர்ந்து தாக்கல் செய்திருந்த 14 அப்பீல்களை சுப்ரீம் கோர்ட் நிராகரித்தது.

கரும்புஉற்பத்தியாளர்கள் வேலை நிறுத்தம்

லக்ஷ்மணபுரி, பிப் 5—

கரும்பு உற்பத்தியாளர் வேலை நிறுத்தத்தினால் உத்தரப் பிரதேசத்தில் உள்ள 66 சர்க்கரை ஆலைகளில் 53 ஆலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. 40 ஆலைகளுக்கு கரும்பு சப்ளை அடியோடு நிறுத்தப்பட்டு விட்டதாகவும் பிரஜா சோஷலிஸ்டு ஸ்தாபனம் இர்நகிஸான் பஞ்சாயத்து இன்றிரவு அறிவித்தது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா.நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்! சி. என். அண்ணாதுரை, எம். ஏ.